இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 30.10.2026

‘ஆவினை’ அழிக்கத் திட்டமா?

த.வெ.க. ஆட்சிக்கு வந்ததும் மின்வெட்டைப் போல பால் தட்டுப்பாடு ஏற்பட்டது. தினந்தோறும் காலையில் கடைகளின் வாசலில் பாலுக்காகக் காத்திருந்தார்கள் மக்கள். ஆவின் பால் கிடைக்கவில்லை என்பதுதான் மக்களின் குற்றச்சாட்டாக இருந்தது. நான்கு மாதங்களாக இதே நிலைமைதான். ‘ஆவின்’ பால் கிடைக்காததால்அதிகவிலைகொடுத்துதனியார்பால்பாக்கெட்டுகளை மக்கள் வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் ஆவின் பால் பொருட்கள் அனைத்தின் விலையையும் அதிகரித்து விட்டார்கள்.

நெய், வெண்ணெய், தயிர், மோர், இனிப்பு வகைகள் உள்ளிட்ட 67 பால் பொருட்களின் விலைகளை அதிகமாக உயர்த்தி விட்டார்கள்.

ஒரு லிட்டர் நெய் 80 ரூபாய் உயர்த்தப்பட்டு ரூபாய் 770 ஆகி உள்ளது. 10 கிராம் வெண்ணெய் 10 ரூபாய் அதிகம் ஆகி ரூபாய் 70 என ஆகி உள்ளது. ஒரு கிலோ பிரீமியம் தயிர் 10 ரூபாய் அதிகம் ஆக்கப்பட்டு 130 ரூபாய் ஆக ஆகி உள்ளது. இதே போல் தயிர், மோர், லஸ்ஸி, பிஸ்கட், குலோப்ஜாம், ரசகுல்லா, கோவா, மில்க் கேக், மைசூர் பாகு, நட்ஸ் அவ்லா, நெய் பாதுஷா, முந்திரி பிஸ்தா, முந்திரி கத்லி, பால் பேடா, மில்க் ஷேக் ஆகிய அனைத்தும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கு முந்தைய விலையை விட 5 முதல் 40 விழுக்காடு வரை விலை அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆவின் பொருட்கள் விலை ஏற்றம் என்பது பொதுமக்களை கோபத்துக்கு உள்ளாக்கி இருக்கிறது. தீபாவளி போன்ற திருவிழா நிகழ்ச்சிகள் வரும் காலக்கட்டத்தில் இத்தகைய அநியாய விலை உயர்வு பொதுமக்களை மிகப்பெரிய அளவில் பாதிக்கிறது. தீபாவளித் திருவிழாவுக்காகத்தான் பொதுமக்கள் அதிகளவு இனிப்பு வகைகளை வாங்குவார்கள். அந்த நேரம் பார்த்து அரசாங்கம் விலைகளை உயர்த்தி இருப்பது பொதுமக்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

‘தினத்தந்தி’ நாளிதழுக்கு மக்கள் அளித்த பேட்டியில், ‘பண்டிகை நாட்கள் நெருங்கும் நேரத்தில் எதற்காக விலையை உயர்த்த வேண்டும்?’ என்று கேட்டுள்ளார்கள். ‘அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள நேரத்தில் ஆவின் பொருட்களின் விலையை உயர்த்துவது நியாயமா?’ என்று கேட்டுள்ளார்கள். ‘பண்டிகைக் காலத்தில் விலைத் தள்ளுபடி அறிவிக்காமல் விலையை உயர்த்தியது என்ன நியாயம்?’ என்று கேட்டுள்ளார்கள். ‘தனியாருக்கு இணையாக ஆவின் ஏன் உயர்த்த வேண்டும்?’ என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறார்கள். ‘குடும்ப பட்ஜெட்டை இது பாதிக்கும்’ என்பது அனைத்துப் பொதுமக்களின் கருத்தாக உள்ளது.

இந்த விலை உயர்வை நியாயப்படுத்தி ‘ஆவின்’ நிறுவனத்தை அறிக்கை வெளியிட வைத்துள்ளார்கள். இந்தத் துறையின் அமைச்சர் அறிக்கை வெளியிட வேண்டியதுதானே? எல்லாவற்றுக்கும் பேசும் அமைச்சர் நிர்மல்குமார் சொல்ல வேண்டியதுதானே? ‘ஆவின்’ நிறுவனத்தை எதற்காக பலிகடா ஆக்க வேண்டும்?

‘தற்போதைய சந்தைச் சூழல்’ என்கிறது அந்த அறிக்கை. த.வெ.க. அரசு வந்த பிறகு புதிதாக சந்தைச் சூழல் என்ன மாறியது? தனியார் பால் நிறுவனங்களுக்கும் இன்றைய ஆட்சியாளர்களுக்கும் மிகப்பெரிய அளவில் நட்புச் சூழல் உருவாகி இருக்கிறது. இதுதான் ‘தற்போதைய சந்தைச் சூழல்’ ஆகும். இதனால்தான் ‘ஆவின்’ நிறுவனத்தையே சிதைக்கப் பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவெளியில் அரசியல் கட்சிகளால் சொல்லப்பட்டு வருகிறது. தனியார் நிறுவனங் களுக்காக ‘ஆவினை’ பலியிட்டு வருகிறது த.வெ.க. அரசு.

‘ஆவின்’ பொருட்களை வாங்காமல் பொதுமக்களை விரட்டும் தந்திரமாகவும் இதைச் சொல்ல முடியும்.

‘அதிகரித்து வரும் உற்பத்திச் செலவுகளைக் கருத்தில் கொண்டு ஆவின் பால் பொருட்களின் விலைகளில் குறைந்த அளவிலான திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது’ என்கிறது இந்த அறிக்கை. உற்பத்திச் செலவுகளை பொதுமக்களின் தலையில் கட்டுவது அரசு நிறுவனத்தின் நோக்கமாக இருக்க முடியுமா?

அரிசி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரித்து விட்ட சூழலில் பால் பொருட்களின் விலையையும் சேர்த்து அதிகரிப்பது ‘சேடிஸ்ட்’ மனப்பான்மை அல்லவா?

ஒரு பக்கம் பால் தட்டுப்பாடு. இதனை த.வெ.க. அரசு சரிசெய்யவில்லை. ‘ஆவின் பால் கொள்முதல் விலை உயர்வால் மீண்டும் சில பால் உற்பத்தியாளர்கள் ஆவினுக்குத் திரும்பி உள்ளார்கள். இதனால் சுமார் 2 லட்சம் லிட்டர் பால் கூடுதலாக கொள்முதல் செய்யப்படுகிறது’ என்று பால்வளத் துறை அமைச்சர் விஜயலட்சுமி சொல்வது உண்மையாக இருந்தால் பால் தட்டுப்பாடு ஏன் ஏற்படுகிறது? பால் உற்பத்தியாளர்களை அரசின் பக்கம் முழுமையாகத் திருப்ப ஏன் முடியவில்லை?

ஒரு பக்கம் பால் தட்டுப்பாடு என்றால் இன்னொரு பக்கம் பால் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு. இதுதான் ‘ஆவின்’ நிர்வாகமா? ஐந்து மாதத்துக்கு முன்பு வரை ஒழுங்காக இருந்த பால் விற்பனை, த.வெ.க. ஆட்சிக்கு வந்ததும் தள்ளாடுவதற்கு என்ன காரணம்? அரசின் கையாலாகாத் தனமா? அல்லது திட்டமிட்டு ‘ஆவின்’ நிறுவனத்தை சிதைக்கும் முயற்சியா?

●●

குற்றவாளிகளை எல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு

கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பதா?

பேராசிரியர் கலையரசன் கைது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக். 30 -

“குற்றவாளிகளையெல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பதா?” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேராசிரியர் கலையரசன் கைது செய்யப்பட்டது குறித்து கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

த.வெ.க. ஆட்சியில் வரலாறு காணாத விலைவாசி உயர்வை அம்பலப்படுத்தியதற்காக #DravidianModel ஆசிரியர் கலையரசன் அவர்கள் சட்டவிரோதமாகக் கைது: த.வெ.க. அரசின் உச்சகட்ட பாசிசம்!

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (MIDS) உதவிப் பேராசிரியராக உள்ள முனைவர் கலையரசன் அவர்களை நேற்று அதிகாலை, சீருடை அணியாத காவலர்கள் சட்டவிரோதமாகக் கைது செய்து, வாடகை வாகனத்தில் ஏற்றிச் சென்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானேன். கைது செய்யப்பட்டவர் சாதாரண நபரோ, குற்றப் பின்னணி கொண்டவரோ இல்லை.

தெரியாமல் கைது செய்துவிட்டோம் என்று கூறுவதா?

கலையரசன் அவர்கள் தமிழ் நாட்டின் முதன்மையான ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரியும் பேராசிரியர். இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகமான JNUவில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகமானகேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் பதிப்பித்த “The Dravidian Model” நூலின் ஆசிரியர்களில் ஒருவர். ஒன்றிய அரசின் திட்டக் குழுவில் பொறுப்பு வகித்தவர். தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையைத் தயார் செய்வதில் பங்களித்தவர். எல்லாவற்றுக்கும் மேல், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவராக இருக்கும் தமிழ்நாடு கால நிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இப்போதும் இருப்பவர்.



அப்படிப்பட்டவரைத் தெரியாமல் கைது செய்துவிட்டோம் என்று கூறுவது நம்பும்படி இல்லை. செய்யாத குற்றத்திற்காக, அடிப்படை உரிமைகள் அனைத்தையும் மறுத்து, அவரது செல்போனைப் பறித்து, கைது செய்து அலைக்கழித்ததைச் சாதாரணச் செயலாக எவரும் கடந்துபோக முடியாது. குற்றவாளிகளை எல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு, கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பது எவ்வளவு பெரிய அசிங்கம்?

உண்மையைச் சொன்னதற்காக கைது செய்வதா?

கலையரசன் அவர்கள்` ஏன் கைது செய்யப்பட்டார்? Dravidian Model என்ற பதத்தை முன்வைத்து, திராவிட ஆட்சியால் தமிழ் நாடு அடைந்த வளர்ச்சியை உலகம் முழுவதும் பறைசாற்றியதற்காகவா? த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகுதான், தமிழ்நாடு இதுவரை சந்தித்திராத விலைவாசி உயர்வைச் சந்தித்துள்ளது என்ற உண்மையைச் சொன்னதற்காகவா?

முட்டாள்களால் நிறைந்த த.வெ.க.!

முட்டாள்களால் நிறைந்த த.வெ.க.வுக்கும் கல்விக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது அனைவரும் அறிந்ததுதான். ஆனால், கல்வியாளர்களைக் கைது செய்து மிரட்டும் அளவுக்கு அறிவின் மீது ஒவ்வாமை கொண்டவர்களாக இவர்கள் நடந்துகொள்வார்கள் என நிச்சயமாக நினைக்க வில்லை. பாசிசத்தில் பா.ஜ.க.வையும் மிஞ்சி விடுவார்கள் என்பதைத்தான் இந்தக் கைது காட்டுகிறது. முதலமைச்சரின் ஒப்புதலோடும் உயரதிகாரிகளின் அனுமதியோடும்தான் இந்த அத்துமீறல் நடக்கிறதா?

அரசிற்கு ஆதரவளிக்கும் கட்சிகள் கண்டும் காணாமல் இருப்பது ஏன்?

முனைவர் கலையரசன் அவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. கடந்த ஆட்சிக்காலத்திலும், அவர் சுதந்திரமாகத் தன்னுடைய விமர்சனக் கருத்துகளை முன்வைத்திருக்கிறார். ஆனால், இந்தத் தரங்கெட்ட த.வெ.க. ஆட்சியோ, எங்கள் ஆட்சியைப் பற்றியோ நிர்வாகத் தோல்விகளைப் பற்றியோ ஊடகங்களில் உண்மையைப் பேசினால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று மிரட்டும் ரவுடி அரசாகச் செயல்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அரசிற்கு ஆதரவு அளித்துக் கொண்டு இருக்கும் கட்சிகள், இந்த அநியாயத்தைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? இதுதான் இவர்கள் பாசிசத்தை எதிர்த்துக் கேள்வி கேட்கும் அரசியலா?

புகழ்பெற்ற பேராசிரியர் மீது பொய்யான குற்றச்சாட்டைப் புனைந்து, அவரை அலைக்கழித்து, துன்புறுத்திய த.வெ.க. அரசின் பாசிச செயல் கடும் கண்டனத்துக்குரியது. தமிழ்நாடு காவல் துறையும், அதற்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அவர்களும் முனைவர் கலையரசன் அவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தூத்துக்குடியில் வீட்டில் இருந்த பெண்மணி வெட்டிக்கொலை

வெளியில்தான் பாதுகாப்பு இல்லையென்றால் வீட்டுக்குள்ளேயுமா?

இதுதான் த.வெ.க. அரசின் சாதனையா எனக் குறிப்பிட்டு - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, அக்.30-

தூத்துக்குடியில் வீட்டில் இருந்த பெண்மணி வெட்டிக் கொல்லப்பட்டது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘எக்ஸ்’ வலைதளப் பதிவில், ‘வெளியில்தான் பாதுகாப்பு இல்லை என்று பார்த்தால் வீட்டிற்குள்ளும் அச்சமடையும் நிலைக்கு மக்களைத் தள்ளியது தான் த.வெ.க.வின் சாதனையா? என்று வினா எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தூத்துக்குடி கந்தன் காலனியில் வீட்டில் தனியாக இருந்த சசிகலா எனும் பெண்மணி வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்

தூத்துக்குடியில் 4 நாட்களில் 7 கொலைகள்!

இதற்கு என்ன விநோத விளக்கத்தை மாவட்டக் காவல்துறையினர் வெளியிடப் போகின்றனர்?

வெளியில்தான் பாதுகாப்பில்லை, நிம்மதியாக யாரும் நடமாட முடியவில்லை என்று பார்த்தால், வீட்டுக்குள் இருக்கவே அச்சமடையும் நிலைக்கு மக்களைத் தள்ளியது தான் த.வெ.க.வின் சாதனையா?

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



‘முத்து நகரம்’ தூத்துக்குடி இப்போது ‘கொலை நகரம்’ ஆகிவிட்டது!

காவல்துறையை நிர்வகிக்கத் தெரிந்தவரிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்!

முதலமைச்சர் விஜய்க்கு - கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, அக். 30 -

“முதல்வர் விஜய், மக்கள் மீது கருணை காட்டி, காவல்துறையை நிர்வகிக்கத் தெரிந்த ஒருவரிடம் அதன் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்!” என, வலைதளப் பதிவொன்றில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தை அடுத்த வில்லி குடியிருப்பு பகுதியை சேர்ந்த வேல்முருகன் என்பவர், அக்டோபர் 22ம் தேதி கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அக்டோபர் 23ம் தேதி சாத்தான்குளம் அருகே உள்ள முதலூர் கிராமத்தில் மேரி ரெஜிலா என்பவர் வீடு புகுந்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அதே நாளில், தூத்துக்குடி திரேஸ்புரம் அருகே மீனவர் பழனி என்பவரை செந்தில் என்ற மீனவர் மது குடிக்கும் போது ஏற்பட்ட தகராறில் கத்தியால் குத்தி கொலை செய்தார்.

அக்டோபர் 24ஆம் தேதி சாத்தான்குளம் அருகே உள்ள பண்ணம்பாறை கிராமத்தில் இடப்பிரச்சினையில் கல்லூரி மாணவர் இசக்கி ராஜா வெட்டிக் கொல்லப்பட்டார்.

அக்டோபர் 27ஆம் தேதி கோவில்பட்டியில் கூலித் தொழிலாளிகளான காளிராஜ் மற்றும் சின்னத்துரை ஆகியோரிடையே ஏற்பட்ட தகராறில், சின்னத்துரை கோடாரியால் தாக்கியதில் காளிராஜ் காலமானார்.

அக்டோபர் 28ஆம் தேதி தூத்துக்குடி கந்தன் காலனி பகுதியில் தனியாக இருந்த சசிகலா என்ற பெண்ணை அவரின் உறவினர் ஒருவர் நகைக்காக படுகொலை செய்தார். தற்போது, சாத்தான்குளத்தை முதலூரில், வீடு புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவத்தில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முத்துகிருஷ்ணனும் உயிரிழந்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு வாரத்தில் 9 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர் கொலைகள் இந்த த.வெ.க. ஆட்சியில் அன்றாட நிகழ்வுகளானது கண்டு கொதித்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் விடுத்த வலைதளப் பதிவு வருமாறு :-

நேற்றைய தினம் தூத்துக்குடி கந்தன் காலனியில், வீட்டில் தனியாக இருந்த சசிகலா என்ற பெண் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நான்கு நாட்களில் ஏழு கொலைகள் எனத் தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

‘முத்துநகரம்’ என்று அழைக்கப்படும் தூத்துக்குடியை, ‘கொலை நகரம்’ என்று அழைக்கும் நிலைக்குக் கொண்டு செல்கிறது த.வெ.க. அரசு. மீண்டும் சொல்கிறேன்... முதலமைச்சர் விஜய் அவர்கள் மக்கள் மீது கருணை காட்டி, காவல்துறையை நிர்வகிக்கத் தெரிந்த ஒருவரிடம் அதன் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.